வாக்குமூலம்

குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்

வழக்கு எண் : STC 575 of 2020

வழக்கு சாட்சி - DW 1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திருமதி.பிரபலதா | ஜாதி | : | |
| கணவர் பெயர் | : | ரமேஷ் | தொழில் | : | இல்லதரசி |
| கிராமம் | : | சித்தம்பலம்புதூர் | சமயம் | : | |
| தாலுக்கா | : | பல்லடம் | வயது | : | 44 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 07.11.2024.

(புகார்தாரர் ஆஜர் இல்லை. புகார்தாரர் சார்பில் பிரிவு 279 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

**முதல் விசாரணை :** **நாள் : 07.11.2024**

1) நான் பொங்கலூர் பாரத ஸ்டேட் பேங்கில் நான் தனி நபர் கடனாக ரூ.7 இலட்சத்தை 19.01.2019 ஆம் தேதி வாங்கினேன். 2019 பிப்ரவரி மாதத்திலிருந்து தொடர்ந்து 8 தவணைகள் செலுத்தி இருக்கிறேன். நான் பெற்ற கடனுக்கு ஆதரவாக 6 காசோலைகளை கொடுத்து இருந்தேன். அதில் 3 காசோலைகளை பூர்த்தி செய்து பொங்கலூர் பாரத ஸ்டேட் பேங்க் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள். கொரோனா காலகட்டம் என்பதால் மீத தொகையை என்னால் கட்டமுடியவில்லை. அந்த இடைப்பட்ட காலத்தில் என் மீது புகாரினை வங்கி தாக்கல் செய்துவிட்டது. 2019 செப்டம்பர் மாதத்திலிருந்து நான் வேலைக்கு செல்வதில்லை. என் மீது துறை ரீதியான நடவடிக்கை நிலுவையில் இருப்பதால் சம்பளம் எனக்கு வரவில்லை. எனக்கு வேலை கிடைத்து சம்பளம் கிடைத்துவிட்டால் முழுதொகையையும் நான் செலுத்திவிடுவேன்.

2) **2019 ஜனவரி மாதத்திலிருந்து 21.10.2024 ஆம் தேதி வரையிலான எனது வங்கி கணக்கின் கணக்கு பட்டியலை எ.சா.ஆ.1 ஆக தாக்கல் செய்கிறேன்.** 27.08.2024 ஆம் தேதியன்று எனது கணவர் வங்கி கணக்கு வைத்துள்ள பல்லடம் சிட்டி யூனியன் வங்கியிலிருந்து RTGS மூலமாக ரூ.47,838/- தொகையை எனது கடன் கணக்கிற்கு செலுத்தினேன். **அதனை காண்பிக்கக்கூடிய ஆவணம் எ.சா.ஆ.2 ஆகும்.** அதனை மறுநாள் 28.08.2024 ஆம் தேதியன்று எனது கணவரின் வங்கி கணக்கிற்கு திருப்பி

அனுப்பிவிட்டதாக செல்போனிற்கு குறுஞ்செய்தி வந்தது. **அதனை காண்பிக்கக்கூடிய 2024 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்திற்கான எனது கணவரின் வங்கி கணக்கு பட்டியலை எ.சா.ஆ.3 ஆக தாக்கல்** செய்கிறேன்.

**புகார்தாரர் தரப்பு குறுக்கு விசாரணை** :

புகார்தாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க புகார்தாரர் தரப்பு குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

மறுவிசாரணை : இல்லை.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

K CHITHRA
Digitally signed by K CHITHRA
Date: 2024.11.07 20:57:25 +0530

நீதித்துறை நடுவர்,

பல்லடம்.